Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC . No. 703 /2023
DEPOSITION OF DEFENCE SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | மணிகண்டன் | Calling: | புட் டெலிவரி |
| Father's Name: | ஹரி | Religion: | |
| Village: | சென்னை | Age: | 29 |
| Taluk: | சென்னை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 23.01.2026 நேரம் : 01.10 PM

( எதிரி ஆஜர்.)

கு.சா.த.சா.1 முதன்மை விசாரணை

பாலசுப்ரமணி என்பவர் என் தந்தையின் மீது அவரிடம் இருந்து பணம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நாங்கள் புகார்தாரரிடம் இருந்து பணம் ஏதும் வாங்கவில்லை. சங்கர் என்பவரிடம் இருந்துதான் பணம் வாங்கினோம். ரூ.1 லட்சம் வாங்கினோம். வட்டி காசும் அசலும் சங்கர் என்பவரிடம் தான் 4 வருடங்களாக கொடுத்துவந்தோம். சங்கர் என்பவரிடம் பணம் வாங்கும் போது என் தந்தையின் பேரில் உள்ள காசோலை ஒன்றை சங்கர் என்பவரிடம் கொடுத்தோம். அவர் பணம் கொடுத்தவுடன் அந்த காசோலையை திருப்பி தந்து விடுவதாக கூறினார். இன்று வரை அந்த காசோலையை வாங்கி தரவில்லை. அதை யாரிடம் கொடுத்தார்கள் என்றும் எனக்கு தெரியவில்லை. ஒரு முறை சங்கர் என்பவர் வாணியம்பாடி வங்கி கிளையில் பணம் ரூ.10,000த்தை போடுமாறு கூறினார். நாங்களும் அந்த வங்கி கணக்கிற்கு ரூ.10,000த்தை போட்டோம். அதற்கான இரசீது என்னிடம் உள்ளது. **அந்த இரசீதின் நகல் எ.ம.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

(இந்த இரசீதை குறியீடு செய்வதற்கு புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) சங்கர் என்பவர் பணத்தை கொடுக்குமாறு வீட்டில் ரொம்ப பிரச்சனை செய்தார். 6 வருடங்களுக்கு முன்பு அசல் மற்றும் வட்டி தொகை சேர்த்து ரூ.5 லட்சமாக சங்கர் என்பவரிடம் கொடுத்துவிட்டோம். பணம் வாங்கி ஆறு வருடமாகி விட்டது. ஆனால் 2 வருடங்களுக்கு முன்பு வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். புகார்தாரரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சங்கர் என்பவரை மட்டும் தான் தெரியும்.

வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மணிகண்டன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.01.23 13:44:03 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC . No. 703 /2023
DEPOSITION OF DEFENCE SIDE WITNESS -2

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜா | Calling: | கார்பெண்டர் |
| Father's Name: | அறிவுடைநம்பி | Religion: | |
| Village: | விருதம்பாக்கம் | Age: | 35 |
| Taluk: | சென்னை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 23.01.2026 நேரம் : 01.20 PM

( எதிரி ஆஜர்.)

கு.சா.த.சா.2 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரியை தெரியும். அவர் சங்கர் என்பவரிடம் இருந்து 4 ,5 வருடங்கள் இருக்கும், அப்போது ரூ. ஒன்றரை இலட்சமோ ஏதோ வாங்கினார். (பிறகு சாட்சி 1 லட்சம் என்று கூறினார்). சங்கர் என்பவர் எதிரியிடம் இருந்து பல முறை வீட்டில் வந்து பணம் வாங்கி சென்றார். இடையில் சங்கர் என்பவர் ஹரி என்பவரிடம் வந்து பிரச்சனை செய்வார். இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்துஸ்தான் வங்கியின் செக் லீப் ஒன்றை சங்கர் என்பவர் எதிரியிடம் இருந்து வாங்கி சென்றார் . அந்த காசோலையை கொடுப்பதாக கூறினார்கள். ஆனால் கொடுக்கவில்லை, அதை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும்.

வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்

(ஓம்.) ராஜா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.01.23 13:44:11 +0530